1972 டிசம்பர் 7]

மாண்புமிகு திரு க. அன்பழகன் : குழந்தை பிறந்தவுடன் எம்.ஏ., வகுப்பிலா அல்லது கல்லூரியில் எந்த வகுப்பில் சேர்ப்பது என்ற பிரச்சினை எழாது. இங்கு அமைக்கப்பட்டதற்குப் பின்னால் படிப்படியாக வளர்ச்சி பெற வாய்ப்பு உண்டு வசதிக்கு வசதிக்கு ஏற்ப அவை செய்யப்படும்.

திரு. அ. ப. சண்முகசுந்தரம் : பொள்ளாச்சி மருத்துவ மனைக் கட்டடம் வசதி இல்லாது இருப்பதால் புதுக் கட்டடம் கட்டுவதற்கு நன் கொடை திரட்டித் தரவேண்டுமென்று அரசு பணித்திருந்தது. அந்த நன்கொடையை , ஐந்து இலட்சம் ரூபாயை இப்போது நாங்கள் கட்டி விட்டோம். அப்படி நன்கொடை திரட்டிக் கட்டிவிட்டதால் அங்கு புதிய கட்டடம் ஆரம்பிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் துரித மாக மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பொள்ளாச்சி நகர மக்களுடைய, அந்தப் பகுதி மக்களின் நல்வாழ்விற்காக ஐந்து இலட்சம் ரூபாய் பொது மக்களிடமிருந்து நன்கொடை திரட்டித் தந்து விரிவான மருத்துவ மனையை அமைக்கவேண்டுமென்ற முயற்சியை ஊக்குவித்த சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கும் அவர்களோடு ஒத்துழைத்தவர்களுக்கும் அமைச்சர் என்ற முறையில் நான் நன்றி செலுத்தவேண்டும். அந்தத் தொகையையும் வைத்து எந்த அளவிற்கு அங்கு விரிவாக கட்டடங்கள் கட்டி மருத்துவ வசதியை விரிவுபடுத்தமுடியுமோ அது செய்யப்படும்.

திருமதி வி. ப. பழனியம்மாள் : தலைவரவர்களே, தாராபுரம் மிகவும் பஞ்சப்பிரதேசம். எனவே, நாங்கள் நன்கொடை வசூல் செய்யமுடியாமல் இருக்கிறோம். எங்களுடைய ஊரில் இருக்கும் மருத்துவமனை பிற்பட்ட நிலையில் இருக்கிறது. பொதுமக்களிடமிருந்து நிதி வசூல் செய்து கொடுக்க முடியவில்லையென்றாலும் கூட எங்கள் மருத்துவ மனையை விஸ்தரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அது பரிசீலிக்கப்படும்.

Improved varieties of livestock.

*68 Q.—Thiru B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Public Health be pleased to state :—

(*a*) whether there is any scheme with the Government to change the entire old stock of animals and poultry which the farmers are having with new improved stocks ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.